## தொழில் பிணக்குகளை இணக்கி வைத்தலுக்கான சிறப்புச் சான்றிதழ்

தொழில் திணைக்களத்தின் மனிதவள அபிவிருத்திப் பிரிவினால் கையாளப்படும் "தொழிற் பிணக்குகளை இணக்கி வைத்தலுக்கான சிறப்புச் சான்றிதழ்" பெறுவதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்தச் சிறப்புச் சான்றிதழானது, இந்த நாட்டின் தனியார் துறைக்கும் அரச சார்புத் துறைக்கும் தொடர்புடைய தொழில்கொள்பவர் - ஊழியர் ஆகிய இரு சாராருக்கும் இடையிலான தொழில் உறவைப் பாதுகாப்பதை இலக்காகக் கொண்டும், தொழிற் சமாதானத்தை நிலைநிறுத்துவதன் மூலம் சிறந்த வேலைச் சூழலை உருவாக்குவதற்காகவும் வழங்கப்படுகிறது. இந்த நாட்டின் தனியார் துறைக்கும் அரச சார்புத் துறைக்கும் சமூகக் கலந்துரையாடலையும் வேலைத்தலக் கூட்டுறவையும் பற்றிய விடயத்தை அறிமுகப்படுத்துவதும், இதற்குரிய நடைமுறைரீதியான பிரயோகங்களை மதிப்பிடுதலும், இந்தச் சிறப்புச் சான்றிதழ் வழங்கப்படுவதற்கான குறிக்கோள்களாக உள்ளன. மதிப்பிடும் படிவத்தைப் பயன்படுத்தி இலங்கையின் நிறுவனங்களிடையே சமூகக் கலந்துரையாடலையும் வேலைத்தலக் கூட்டுறவையும் பற்றிய முறைகளைப்புரிந்துகொள்ளச் செய்வதும், சிறப்புச் சான்றிதழைப் பெறுவதற்காக அவற்றைப் பிரயோகிப்பதன் மூலம் சிறந்த வேலைச் சூழலை உருவாக்குவதும் இதன் இன்னொரு நோக்கமாக உள்ளது.

இந்தச் சிறப்புச் சான்றிதழுக்கு விண்ணப்பிப்பதற்காக, பகுதி II இல் தரப்பட்டுள்ள விண்ணப்பப் படிவம் மற்றும் பகுதி III இல் தரப்பட்டுள்ள மதிப்பீட்டுப் படிவம் உரியவாறு பூர்த்திசெய்யப்பட்டு, பகுதி I இலுள்ள அறிவுறுத்தல்களின்படி சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

ஆரம்ப விண்ணப்ப மதிப்பாய்வின் பின்னர் கண்காணிப்புக்காக உங்களது நிறுவனம் தெரிவுசெய்யப்பட்டால், அது பற்றி உங்களுக்கு அறிவிக்கப்படும் என்பதுடன், கண்காணிப்புக்குரிய தினத்தில் தொழில்கொள்பவர் - ஊழியர் ஆகிய இரு சாராரினதும் கருத்துக்கள் கேட்கப்பட்டு, மதிப்பீட்டுப் படிவத்தில் தரப்படும் தகவல்கள் உறுதிப்படுத்தப்படும்.

உங்களது நிறுவனம் மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னர்,உங்களது நிறுவனத்தின் சமூகக் கலந்துரையாடலும் வேலைத்தலக் கூட்டுறவும் மேம்படுத்தப்படுவதற்குரிய ஆலோசனையும் வழிகாட்டல்களும் எம்மால் வழங்கப்படும்.

அதன்படி, இவ்வாறான சிறப்புச் சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்கு முன்வருமாறு உங்களது நிறுவனத்தை கௌரவமாக அழைக்கின்றேன்.

சட்டத்தரணி பீ.கே. பிரபாத் சந்திரகீர்த்தி
தொழில் ஆணையாளர் அதிபதி
தொழில் திணைக்களம்

B. K. Prabath Chandrakeerthi (Attorney-at-Law)
Commissioner General of Labour
Department of Labour
Colombo 05

**பகுதி I**

### விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்கள்

1. தோட்டத்துறை, உற்பத்தித்துறை, சேவைத்துறை, ஆடைகள் தொடர்பான துறை ஆகிய நான்கு பிரதான துறைகளிலுள்ள நிறுவனங்களிடையே இந்தப் போட்டி நடாத்தப்படுவதுடன், இவற்றிலுள்ள ஊழியர்களது எண்ணிக்கையின் அடிப்படையில் வகுப்பாக்கம் செய்யப்படும் சிறிய அளவு, நடுத்தர அளவு, பாரிய அளவு என்றவாறான 12 வகை நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
2. உங்களது நிறுவனம் எந்த வகைக்குள் அடங்கும் என்பதைப் பொறுத்து, விண்ணப்பப் படிவத்தின் முன் பக்கத்திலுள்ள அட்டவணையின் உரிய இடத்தில் "√" என்ற அடையாளத்தை இடுக.
3. விண்ணப்பத்தின் பகுதி II இல் விடயங்கள் 1 - 13 வரை, உங்களது நிறுவனத்தைப் பற்றிய உண்மையானதும் சரியானதுமான தகவல்களை வழங்குதல் வேண்டும்.
4. அதன் 14 ஆவது விடயத்தில், உங்களது நிறுவனத்திற்கு வருகை தருவதற்காக, அதன் அமைவிடம் பற்றிய பருமட்டான வழிப் படமொன்றினைத் தருக (மதிப்பீடு செய்யும் அலுவலர்கள் வருகை தர வேண்டுமென்பதால், வரும் வழிக்குரிய சரியான விபரங்களைக் குறிப்பிடுக).
5. பகுதி III இல்மதிப்பிடுவதற்குரிய தகவல்கள் இதன் 'அ', 'ஆ', 'இ' ஆகிய 3 பகுதிகளில் தரப்படுதல் வேண்டும்.
6. பகுதி 'அ' வில், 8 தலைப்புகளில் விடயங்கள் கேட்கப்படுவதுடன், பகுதி ஆ' வில் 6 தலைப்புகளில் அவை கேட்கப்படுகின்றன. பகுதி 'அ' வுக்குரிய ஆகக்கூடிய புள்ளிகளும் பகுதி 'ஆ' வுக்குரிய ஆகக்குறைந்த புள்ளிகளும் மதிப்பீட்டுத் தாளில் தரப்பட்டுள்ளதுடன், அவ்வாறான ஆகக்கூடிய, ஆகக்குறைந்த புள்ளிகளுக்கிடையிலான உங்களது புள்ளிகளை உரிய வகையில் நீங்களே வழங்கலாம்.
7. விண்ணப்பத்தின் பகுதி 'ஆ' வில் உள்ள விடயங்கள் 1 தொடக்கம் 6 வரை கேட்கப்பட்டுள்ள தகவல்களை, உங்களது நிறுவனத்தின் ஆவணங்களிலிருந்து சரிபார்த்து, உண்மையான நிலைமைக்கேற்றவாறு புள்ளிகளை உரிய வகையில் நீங்களே வழங்கலாம்.
8. எப்போதும் விண்ணபத்தில் தரப்படும் தகவல்களைப் பற்றிய சரியான தன்மைகளைப் பேணுவது உங்களது பொறுப்பாகும்.
9. உங்களது விண்ணப்பம் பின்வரும் காரணங்களுக்காக, முதலாவது படிநிலையிலேயே நிராகரிக்கப்படுவதற்கு இடமுண்டு.
   அ. பகுதி 'ஆ' விலுள்ள 1.1, 2.1 தொடக்கம் 2.5 வரை, 4.1 தொடக்கம் 4.3 வரை, 5.1 தொடக்கம் 5.4 வரை 6.3 ஆகிய வினாக்களுக்குரிய விடைகள் "இல்லை" என வழங்கப்படும்போது.
   ஆ. பகுதி 'ஆ' வில் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய மொத்த மறைப் பெறுமானங்கள் 50 இலும் அதிகமாக இருக்கும்போது.
   இ. பகுதி 'ஆ' வில் 3 ஆவது அளவுகோலின் கீழ் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு மறைப் பெறுமானமாக முப்பது (-30) புள்ளிகளைப் பெறும்போது.
10. "தொழிற் பிணக்குகளை இணக்கி வைத்தலுக்கான சிறப்புச் சான்றிதழ்" பெறுவதற்காக, மதிப்பீட்டுத் தாளின் பகுதிகள் 'அ', 'ஆ' ஆகியவற்றில் மொத்தப் புள்ளிகளாக ஆகக் குறைந்தது 80 புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.
11. பூர்த்தி செய்யப்பட்ட படிவத்தை 2023-07-25 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக எமக்கு மின்னஞ்சல் அல்லது தபால் மூலம் அனுப்பி வைக்கவும்.

தொழில் ஆணையாளர்,
மனிதவள அபிவிருத்திப் பிரிவு,
12 ஆம் தளம், "மெஹெவர பியெச" கட்டிடம்,
தொழில் திணைக்களம், நாரஹேன்பிட்ட
கொழும்பு 05.

மின்னஞ்சல்:- labourhrddivision@gmail.com

**மேலதிக விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும்:-**

தொலைபேசி - 011-2104828, 011-2104829, 011-2104830